# பொதுக்காலம் 24ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

கிறிஸ்துவின் அன்பை உணர்ந்த நாம் நம் சொல்லில் அல்லாமல் செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்ய நம் அன்னையாம் திரு அவையோடு இணைந்து ஆண்டின் பொதுக்காலம் 24ஆம் ஞாயிறைச் சிறப்பிக்கின்றோம்.

'உலகிற்கு உகந்தவர், இறைவனுக்கு உகந்தவர் ஆகார்' என்பதை சிந்திக்க இன்றைய இறைவார்த்தை வழிபாடு அறைகூவல் விடுக்கிறது. இயேசுவின் பணிவாழ்வில் அவரை திருமுழுக்கு யோவான், எலியாவாக, இறைவாக்கினருள் ஒருவராக மக்களும் சீடர்களும் கண்டிருந்த போது, இயேசுவோடு உடன் பயணித்து அவரின் வல்ல செயல்களைக் கண்டிருந்த பேதுரு, 'நீர் மெசியா' என்று பதில் கூறி பதவியும் அதிகாரமும் படைத்த உலக தலைவர்களுக்கு இணையான ஒரு தலைவராக இயேசுவை எதிர்பார்க்கிறார். பேதுரு இறைவனின் திருவுளம் என்ன என்பது பற்றி சிந்திக்காமல், மனித பார்வையில் இயேசுவைக் கடிந்து கொள்கிறார்.

கடவுளுக்கு ஏற்றதா? மனிதருக்கு ஏற்றதா? என்பதை நாளும் சிந்தித்து, நமது சொல்லும், செயலும் மனிதரைத் திருப்திப்படுத்துமா என்று எண்ணாமல் இறைவனுக்கு மகிழ்ச்சி தரும் செயல்களையே முன்னெடுப்போம்.

துன்பங்களைத் துணிச்சலோடு ஏற்று, இயேசுவைப் பின்பற்றி, அவர் காட்டிய பாதையில் பயணித்து நிலைவாழ்வை உடைமையாக்கும் வரம் வேண்டியவர்களாய் இந்த தியாகப் பலியில் பங்கெடுப்போம். இறை ஆசீர் பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

ஆண்டவருக்குள் அன்பார்ந்தவர்களே! நம் ஆண்டவர் தனது இறுதி தருணங்களில் எப்படி இருந்தார் என்பதை முன்னறிவிக்கும் விதமாக அமைந்துள்ள இறைவாக்கினர் எசாயாவின் இறைவார்த்தைக்கு முழுமையாய் செவிசாய்ப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

அன்பு நிறைந்தவர்களே! நம்முடைய விசுவாசமும் நம்பிக்கையும் செயல்வடிவம் பெற வேண்டும். அதன் மூலம் பிறர் பயன்பெற வேண்டும்; ஆண்டவரிடம் திரும்பி வர வேண்டும் என அழைப்பு விடுக்கு புனித யாக்கோபின் குரலுக்குச் செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. எமக்காய் உயிரைத் தந்த இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதிநிலையினர் அனைவரையும் உமது அருட்கரத்தால் தொடர்ந்து ஆசீர்வதித்து, அவர்களின் நம்பிக்கை செயல்வடிவம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எம் அரசரே இறைவா! எம் நாட்டின் அரசியல் தலைவர் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் தங்கள் நற்செயல்களாலும், நல்ல திட்டங்களாலும் நாட்டினை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்திட தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. ஞானத்தின் இருப்பிடமே எம் இறைவா! பள்ளி, கல்லூரிகளில் பயிலும் எங்கள் மாணவ, மாணவிகள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்களுக்குத் தேவையான ஞானத்தை நிறைவாகப் பொழிந்திட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பால் எம்மை வழிநடத்தும் இறைவா! எம் பங்கினை ஆசீர்வதியும். நாங்கள் எங்கள் நம்பிக்கையில் மென்மேலும் வளர்ந்து குடும்பங்களில் ஒற்றுமையுடன் வாழ்ந்து, உலகில் கிறிஸ்துவைப் பறைசாற்றி வாழ்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com